# பூனகரி பிரதேச சபை

# கிளிநொச்சி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மே 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 ஒக்தோபர் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய பூனகரி பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி பூனகரி பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுடன் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுமதிகளின் கீழ் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|
| | பொறுப்புக்கள் | | சொத்துக்கள் | |
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா |
| நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் கூறல்கள் | - | - | 01 | 11,100 |
| நிதிக்கூற்றுக்களில் விடுபாடுகள் | 01 | 55,000 | - | - |

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 431,340 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

ரூபா 840,000 தொகையான காணி கொள்வனவு தொடர்பில் காணி விலை மதிப்பீட்டறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.3.5 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள். விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | |
| | 24 ஆம் பிரிவு | பிரதேச சபையின் பிரதேசத்திற்குட்டப்பட்ட வீதிகள் மற்றும் காணிகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 153 ஆம் பிரிவு | ரூபா 5,581 ஆன நிறுத்தி வைத்தல் வரியினை அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | இல. 1645 | சபையினால் வாகன ஓட்டப்பதிவேடுகள் |

உரியவகையில் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| i. 2010 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | 2010 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையினால் சுட்டிக்காட்டப்பட்ட பாவிக்க முடியாத பொருட்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களிற்கான எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 612,435 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 2,400,822 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன. இருப்பினும் 2009 ஆம் ஆண்டிற்காக சபை பாதீட்டினை தயாரித்திருக் காதிருந்ததுடன் யுத்த நிலைமை காரணமாக சபை நேர்த்தியாக இயங்கியிருக்கவுமில்லை.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **வருமான விடயம்** | **பாதிடப்பட்டவை** | **உள்ளபடியானவை** | **31 திசெம்பரில் திரண்ட நிலுவை** | **பாதிடப்பட்டவை** | **உள்ளபடியானவை** | **31 திசெம்பரில் திரண்ட நிலுவை** |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| வாடகை மற்றும் வரிகள் | - | 65 | - | - | - | - |
| குத்தகை வாடகை | 361 | 301 | 105 | - | 84 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 325 | 153 | 5 | - | - | - |
| ஏனைய வருமானங்கள் | 12,858 | 8,820 | - | - | 9,057 | - |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு நியதிச் சட்டங்களின் கீழ் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்திடமிருந்து சபையினால் பெறவேண்டிய தண்டப்பணங்கள் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

பெறப்பட வேண்டியிருந்த முத்திரைக் கட்டணங்களை கணிப்பீடு செய்வதற்கும் தொடர்புடைய விபரங்களை பதிவாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன. இருப்பினும் 2009 ஆம் ஆண்டிற்காக சபை பாதீட்டினை தயாரித்திருக் காதிருந்ததுடன் யுத்த நிலைமை காரணமாக சபை நேர்த்தியாக இயங்கியிருக்கவுமில்லை.

| **செலவின வகை** | **2010** | | | **2009** | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப்ட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| ஆளுக்குரிய வேதனம் | 8,079 | 8,124 | (45) | - | 5,620 | (5,620) |
| ஏனையவைகள் | 5,164 | 1,828 | 3,336 | - | 1,037 | (1,037) |
| உப மொத்தம் | 13,243 | 9,952 | 3,291 | - | 6,657 | (6,657) |
| **மூலதனச் செலவு** | 15,000 | 2,308 | 12,692 | - | 3,838 | (3,838) |
| முழு மொத்தம் | 28,243 | 12,260 | 15,983 | - | 10,495 | (10,495) |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியனர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவிநிலை | 13 | - |
| இரண்டாம் மட்டம் | 10 | 12 |
| ஆரம்ப மட்டம் | 18 | 18 |
| ஏனையவர்கள்(சமயாசமயம்/தற்காலிகம்) | - | 8 |
| மொத்தம் | 41 | 38 |

**2.4.2 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய மனித வளம்**

அங்கீகரித்த பதவியணியில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் மாத்திரம் உள்ளடங்கியிருந்த போதிலும், பூனகரி பிரதேச சபையின் உள்ளபடியான பதவியணியில் மூன்று தொழில்நுட்ப உத்தியோகத்தர் காணப்பட்டனர்.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**2.5.1 பெறவேண்டிய கணக்குகள்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,059,857 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 54,153 ஆகும்.

**2.5.2 பெறவேண்டிய பதவியணிக் கடன்கள்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பதவியணிக் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 1,284,894 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 130,144 ஆகும்.

**2.5.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்**

பௌதீகப் மெய்மையாய்வு/பொருட் கணிப்பீட்டுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாது 2010 திசெம்பர் 31 இல் காணப்பட்ட புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா. 13,558,311 ஆகும்.

**2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

காணிகளிற்கான உறுதிகளின்றி சபையினால் ரூபா 979,000 இற்கு காணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், அரசாங்கக் காணிகளைப் பெற்றுக்கொள்ளாது சபையினால் தனியார் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**2.7 செயலாற்றல்**

கணக்காண்டின் தொடக்கத்தில் சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த

குறிக்கோல்கள் மற்றும் அதன் மீதான செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்ய முடியவில்லை.

**2.8 உள்ளகக் கணக்காய்வு**

பிரதேச சபையில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(அ) பாதீடு

(இ) வருமான சேகரிப்பு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்